# 'பத்மா' புத்தகத்தின் தமிழ்ப் பதிப்பு வெளியீட்டு விழா



'பத்மா' புத்தகத்தின் தமிழ் பதிப்பிற்கான வெளியீட்டு விழா.
**படம்: யோகிதா அன்புச்செழியன்**

**யோகிதா அன்புச்செழியன்**

இந்திய கலாசாரத்தில் பெண்களுக்கு அளிக்கப்படும் மதிப்பு அவர்களின் குழந்தை பெற்றெடுக்கும் தகுதியைப் பொறுத்தே அமையும் சூழல் இன்றும் நிலவுகிறது.

சிக்கலான கர்ப்பங்களையும் கருச்சிதைவுகளையும் மையமாகக் கொண்ட கதைகளை அரிதாகவே நாம் காண முடிகிறது. இதனால் அத்தகைய சூழலில் அவதியுறும் பெண்களைப் பற்றி அதிகமாக பேசுவதோ பகிரப்படுவதோ இல்லை. இதுபோன்ற சமூக அவலங்களை உடைக்கும் எண்ணத்தோடு 'பத்மா' என்ற புத்தகத்தை திருமதி மாலா மகேஷ் எழுதியுள்ளார்.

இக்கதையில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கேரளாவில் அழகும் அறிவும் நிரம்பிய 16 வயது பத்மா வாழ்ந்து வருகிறார். இன்றைய இருபத்தோறாம் நூற்றாண்டில் மும்பையில் விளம்பர நிர்வாகியாகப் பணிபுரிகிறார் நைனா எனும் கதாபாத்திரம். இவ்விருவரும் வெவ்வேறு காலகட்டத்தில் வாழும் வெவ்வேறு பெண்கள். ஆனால் அவர்களுடைய பிரச்சினை ஒன்றுதான். அது, திருமணமாகியும் மகப்பேறு இல்லாதது.

சிங்கப்பூரில் கடந்த சில ஆண்டுகளாகக் கருவுறுதல் விகிதம் தொடர்ந்து குறைந்து வருகிறது. மேலும், வரலாற்றில் முதன்முறையாக சிங்கப்பூரின் ஒட்டுமொத்தக் கருத்தரிப்பு விகிதம் சென்ற ஆண்டு 1.0க்குக் கீழ் பதிவாகியுள்ளது.

இந்நிலையில் இந்தப் புத்தகத்தின் கதாபாத்திரங்கள் இந்தியாவில் வாழ்பவர்களாக இருந்தாலும் 'பத்மாவின்' மையக் கருத்துகள் சிங்கப்பூரர்களிடம் போய் சேரும் என்றுதான் நம்புவதாக கருதினார் திருமதி மாலா.

'பத்மா' வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக செம்பவாங் குழுத்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் விக்ரம் நாயர் கலந்துக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட முக்கிய விருந்தினர்களான இந்து தமிழ் திசை இயக்குநரும் அக்ரோகார்ப் இன்டர்நேஷனல் இயக்குநருமான திருமதி அகிலா ஐயங்கார், தேசிய நூலக வாரியத்தின் தமிழ்மொழிப் பிரிவு தலைவர் திரு அழகிய பாண்டியன், சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் பதிவாளரான திரு. ஆர். ராஜாராம், திரு விக்ரம் நாயர் ஆகியோருக்கு 'பத்மா' புத்தகம் வழங்கப்பட்டது.

'பத்மா' புத்தகம் https://malamahesh.com/ என்ற இணையத்தளத்தில் விற்கப்படுகிறது.

yogitaa@sph.com.sg